முருகப்பெருமான் துணை

**உலக ஞானத் தலைவன் முருகப்பெருமான் அருளிய அருள்வாக்கு**

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்** பாகம் : 1638

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**24.03.2024,** ஞாயிற்றுக்கிழமை

1. ஞானத்தின் காவலனே அரங்கா
   ஞானிகளை படைக்க வந்த தேசிகா
   தானத்தின் மகா உச்சத்தின் தர்மராஜனே
   தவபலம் மிக்க குருராஜனே
2. அரசனே அரங்கனே உந்தனுக்கு சுப்பிரமணியர் யானும்
   அருளுவேன் ஞானஅறிவுரை ஆசி
   வரமாக நித்தம் ஆறுமுகன்யான்
   வாரிவழங்கி உந்தனுக்கு மகாசக்தியை
3. சக்தியை இந்தபேருலகம் காக்கும்வண்ணம்
   சடாட்சரமாய் சரவணஜோதியாய் சகலதுமாய்
   தடையற ஆறுமுகன்யான் அரங்கன் உமக்கு
   தவபலமாக அருளி வருகின்றேன்
4. சரணவ சுடரேற்றி நீ அருளுகின்ற
   சகாப்தம்தான் இனிவருங்காலம் உலகம்எல்லாம்
   மகத்துவம் மிக்க ஞானசித்தர் காலமாக
   மக்கள் எல்லாம் மகிழ்வுஅமைதி காணுகின்ற ஞானஆட்சி காலமாக
5. ஆகவே மாற்றத்தை ஆறுமுகன்யான்
   அரங்கன்உன் அவதாரமாக நிகழ்த்துவேன்
   வரலாறாக உலகம் அரங்கன் பெருமையையும்
   வழிநடத்துகின்ற அரங்கன் தொண்டர் பெருமக்களையும்
6. தர்மத்தால் மகிமை புரிகின்ற
   தவராஜன் உன் சக்திதனை
   தன்னையே உலகம் வியந்து நோக்கி தர்மலோகமாக
   தனிப்பெருங்கருணை வடிவான ஞானசித்தர் காலமாக

7. ஆகவே மாற்றங் கண்டு உலகம்
அரங்கன் உன்னால் ஞானலோகமாக
ஞான சித்தர் காலமாக
ஞானஆட்சி காலமுமாக மாற்றங் காணும்
ஞானஅறிவுரை ஆசி முற்றே

–சுபம்–